செ.வெ.எண்: 41/2021 நாள்: 17.08.2021

**வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த குழந்தைகளுக்கு தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் சேர்க்க 25% ஒதுக்கீடு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ் வினீத் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

பள்ளிக்கல்வித்துறையின் மூலம் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2009, சட்டப் பிரிவு 12 (1) (சி) ன் கீழ் சிறுபான்மையற்ற அனைத்து தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் 25% ஒதுக்கீட்டில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளைச் சேர்க்கை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்பொருட்டு அரசால் ஏற்கனவே வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு 2013-14 ம் கல்வியாண்டு முதல் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த குழந்தைகள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். மேலும் 2021-2022 ஆம் கல்வியாண்டிற்கு 5.07.2021 முதல் 13.08.2021 வரை இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளவிண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்திலுள்ள தனியார் பள்ளிகளில் 25% இடஒதுக்கீட்டில் பள்ளிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இடங்களைவிடக் கூடுதலாக விண்ணப்பங்கள் பெறபட்டுள்ள 146 பள்ளிகளில் 19.08.2021 அன்று காலை 9.00 மணிக்கு மாணாக்கர்கள் சேர்க்கைக்காக குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். விண்ணப்பித்த பெற்றோர்கள் தாங்கள் விண்ணப்பித்த பள்ளியில் நடைபெறும் குலுக்கலில் கலந்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செ.வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்,**